

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சந்தித்து, ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் 26.10.2023 அன்று நடைபெற்ற 7வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில், ஜப்பான் சுற்றுலா கண்காட்சி செயற்குழுவின் தலைவர் ஹிரோயுகி தகாஹாஷி (Hiroyuki Takahashi) அவர்கள் தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்கு வழங்கிய Executive Committee Award விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மைச் செயலாளர் /சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் /மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் உள்ளனர்.

# டெல்லி - நொய்டா பகுதிகளில் காற்று மாசு அதிகரிப்பு!

புதுடெல்லி, நவ. 4 - தலைநகர் டெல்லியில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாகன பயன்பாடு, அண்டை மாநில எல்லைகளில் எரிக்கப்படும் விவசாய கழிவுகளில் இருந்து வெளியேறும் புகை, கட்டுமான பணிகளால் எழும் புழுதி ஆகியவற்றால் காற்று மாசு அதிகரித்துள்ளது. கடந்த சில நாள்களாக பாதிப்பு அளவு லேசாக மாசு குறைந்திருந்த நிலையில், நேற்று மீண்டும் அதிகரித்துள்ளது. டெல்லியில் நேற்று காலை, காற்றின் தரக்குறியீடு அளவு 346 புள்ளிகளாக பதிவாகியிருந்தது. இதனால், வாகன ஓட்டிகளும் அதிகாலையில் நடைபயிற்சி மற்றும் உடல்பயிற்சிக்கு சென்ற மக்களும் கடும் சிரமத்துக்கு ஆளாகினர். இதேபோல் நொய்டாவிலும் காற்று மாசு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நொய்டா வின் பல்வேறு பகுதிகளி லும் காற்று தரக்குறியீடு 400 புள்ளிகளுக்கும் மேல் பதிவாகி இருந்தது.

இதனால் முச்சு விடவே பெரும் சிரமமாக இருப்பதாக நொய்டா வாசிகள் தெரிவித்துள்ளனர்.

டெல்லியில் அதிகரிக்கும் காற்று மாசை கட்டுப்படுத்த புழுதி பறக்கக்கூடும் என சந்தேகிக்கப்படும் பகுதியில் நீர் தளிப்பு கருவி மூலம் தண்ணீர் தெளிக்கப்பட்டு வருகிறது.

இதே போல் என்.சி.ஆர். எனப்படும் தேசிய தலைநகர பிராந்திய பகுதியில் அத்தியாவசியம் இல்லாத கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அரசு நிர்வாகம் தடை விதித்துள்ளது.



சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பேரிடர் காலங்களில் தேவையான அலுவலர்களை தொடர்பு கொள்ளும் வகையில் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால் தயாரிக்கப்பட்ட தொலைபேசி கையேட்டை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், பேரிடர் மேலாண்மை இயக்குநர், சி. அ. ராமன், ஆகியோர் உள்ளனர்.



கடலூர் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் கூட்டத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். இதில் தொகுதி பார்வையாளர் ச.அ.பெருநற்கிள்ளி, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### தேர்வுக் குழுக்களின் பரிந்துரைகளின்படி பல்கலைக் கழகங்களில்

# அரசு நியமித்த துணைவேந்தர்களை நியமிக்க ஆளுநருக்கு உத்தரவிடுக!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மேலும் ஒரு வழக்கு!

புதுடெல்லி, நவ.4 - சென்னை பல்கலைக்கழகம், கல்வியியல் பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் ஆகிய 3 பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்களை தேர்வு செய்வதற்கான குழுக்களை அமைத்து தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி சில மாதங்களுக்கு முன் உத்தரவிட்டிருந்தார்.

ஆளுநரின் இந்த செயலுக்கு தமிழ்நாடு அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. ஆளுநரின் நடவடிக்கை சட்டரீதியாக எதிர்கொள்ளப்படும் என உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அரசு நியமித்த தேர்வுக் குழுக்களின் பரிந்துரைகளின்படி பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை நியமிக்க ஆளுநருக்கு உத்தரவிடக் கோரி தமிழநாடு அரசு உச்சநீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாட்டில் உயர்கல்வி துறையின் கீழ் 13 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருவதாகவும், இப்பல்கலைக்கழகங்களுக்கென தனித்தனியே சட்டம் மற்றும் விதிகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின்படி துணைவேந்தர்களின் பதவிக்காலம் முடிந்தவுடன் அதனை நிரப்ப மாநில அரசு அமைக்கும் தேடுதல் குழுக்கள் மூலம் துணைவேந்தர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுவார்கள் என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு அரசு, உயர்கல்வித் துறையின்கீழ் இயங்கும் பல்கலைக் கழக சட்டவிதிகளில், ஆளுநர், துணை வேந்தரை தேர்வு செய்யும் தேர்வுக்குழுக்களை அமைக்க வழிமுறை இல்லை என்றும் தெரிவித்துள்ளது.

இதுவரை தேடுதல் குழு உறுப்பினர்கள் அந்தந்த பல்கலைக்கழக சட்ட விதிகளின்படி நியமிக்கப்பட்டு அரசாணை வெளியிட்டு, அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் தற்போது ஆளுநர் நடைமுறையில் உள்ள பல்கலைக் கழக சட்ட விதிகளுக்கு எதிராக தேடுதல் குழுக்களை தன்னிச்சையாக முடிவு செய்து அறிவிக்கை வெளியிட்டுள்ளார் என்றும், ஆளுநரால் அமைக்கப்பட்டுள்ள இந்த தேடுதல் குழுக்கள் முழுக்க முழுக்க பல்கலைக்கழக சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு மாறானது என்றும் தமிழ்நாடு அரசு தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்நாடு ஆளுநர் அமைத்துள்ள தேடுதல் குழுக்கள் விதிகளுக்கு எதிரானது என அறிவிக்க வேண்டும் என்றும், அரசு நியமித்த தேர்வுக்குழுகளின் பரிந்துரைகளின்படி பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை நியமிக்க ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் வலியுறுத்தி உள்ளது.

